# "LION AIR" TRAGEDY

## A Memorial Library

A Service of Remembrance for all those who died in the 'Lion Air' tragedy (29-09-98) was conducted on Wednesday the 22nd September 1999 at Kudathanai C.S.I. Church. The Service was led by Rev M.Solomon assisted by Bro J. A Suthagar worker in charge, Kudathanai Church. The Bishop in his sermon said that there are many things happening in this world which are not the will of God. As long as there is sin in this world there will be suffering. Our Lord Jesus Christ did not comment on the "Karama" theory. He has only asked us to identify ourselves with the suffering community. As Christians we are asked to struggle with the suffering, share with the suffering, and side with the suffering. Great Captains normally like to sink with the ship. Bishop said.

Parents and relations of those who died at the "Lion Air" tragedy participated in the Service.

The Service was followed by the opening of a library at Kudathanai in memory of all those who died in the "Lion Air" tragedy


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 08 th October 1999 No. 20

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


## St. Johns' College Magazine

We heartily welcome the St Johns' College Magazine VOL LXXXIX released recently

It is a report on "**that glorious year 1998 A year of great singnificance - a historic land mark in the annals of St. John's College**".

Dr. V. A. Banjamin has written a very informative article on the beloved physician Dr. G. R. Handy. According to him to be admired by the Rt. Rev. Dr Sabapathy Kulandran was a unique recognition- Appreciations have been written on the lives of former teachers and minor employees died during the period under review The editor has to be congratulated for giving so much space for students contributions at a time of forbidding costs. Giving encouragement to budding writers is an important task of the school. The photographs of the Principal's visit to Australia have brightened the issue.

We admire the modesty of the printer who refrained from mentioning the name of his press anywhere in the magazine.

A praise worthy production in these times of uncertainities and controls — Scribe.

### *Three Students Missing*

The parents of three students of Anaikottai, Manipay area have complained to Human Rights Commission, Jaffna that these students have been missing from Friday 13th of August 1999. The Names of the missing students are as follows:-

1. Jeyarajah Chana 15 years Anaikottai
2. Thevarajah Rama 13years (Navaly)
3. Mahalingam Dhushanthan 15 years (Manipay)

### *Jaffna Central College Grounds*

Jaffna Central College Grounds will be renovated at the cost of Rs 2 Million. This amount has been granted by the Sports Ministry of Sri-Lanka It is hoped that the renovation work will be completed by September 1999.

### Association of Hindu Teachers

Arrangements are made to form a Hindu Teachers Association in Jaffna Mr V K Thanabalan, President of the Hindu Youth League said that this will be established by the end of this month.

## In Jaffna on Holiday

Dr. Karunairaj Jeevaratnam and his wife Indi Somasundram Jeevaratnam were on a short holiday in Jaffna during the first week of August. (1999).

Dr Jeevaratnam is serving as Anesthetist in New Zealand. Mrs. Jeevaratnam has retired from teaching. She helps in in the activities of the Anglican Church of New Zealand.

## Driebrg College Plans 125th Anniversary

A meeting of the old students of Drieberg College was held in the College on Sunday the 25th July 1999 The meeting was presided over by Mr. S. Nagendra Rajah, the Principal of the College

Mr. P. S Gnanaseelan the Secretary read the Minutes of the Alumni Association Meeting. The old students resolved to write to

(Contdu. Page 4)

### *63 Selected for Diploma Course*

63 teachers are selected this year from Government schools to follow the Diploma Course at the University of Jaffna. The University selects another group of students from private schools after conducting an entrance examination.

## *Annual Commomoration of Ashram*

The 60th Anniversary of founding of the Christa Seva Ashram, Chunnakam was held at Colombo C S I Church on 21st August 1999. Call to worship was done by the Rev Sathy Tambiraja. Litany was done by Rev. S. K. Kadirgamar. The Sermon was preached by the Rev A. A. Paul on the text "Those want to be my disciples should deny themselves and carry their cross". The Holy Eucharist was celebrated by the Rev. P R Navandrangoolam. "Kanji" was then served to all those participated. The service was organised by the "friends of Ashram".

## *Seminar on Human Rights*

A Seminar on Human Rights organised by the National Christian Council, Sri Lanka and sponsored by the Christian Conference of Asia was held at the Roman Catholic Retreat Centre. Mattakulia from 26th to 28th August 1999.

### *A new Church at Sathiapuram*

On Wednesday the 18th August our Bishop laid the foundation stone for the new C S I Church at Sathiapuram. The new Church which is going to be constructed with the volunteer physical help of the members and Diocesan contribution will be completed before the rainy season in October 1999

### Examination Success

Rev A S Thavagunananthan our minister at Uduvil and Rev Milton Solomon our minister at Erlalai North have passed the B A (Special Degree) Examination of the University of Jaffna. Conducted in 1998.

## Ground Grams Production

**An experimentary production of ground grams in Palai in 1999 proved to be a success. The Multi Purpose Cooperative society of Palai buys the ground grams at gauranteed price**

## Speakers at KNH Sunday Service on 26 - 09 - 99

- Alaveddy - Mr. Gurunathan
- Annaikoddai - Mr B Davidraj
- Araly - Miss P Banureka
- Atchuvely - Mr V Kirubaharan
- Akkarayan - Rev John Selvam
- Chankanai - Mr S Uthayanan
- Chavakachcheri - Mr A B Gunaseelan
- Chettikulam - Mr Thivaharan
- Colombo - Mr N S P Thampoe
- Erlalai North -Mr N Raveendran
- Erlalai South - Sathiaseelan
- Gandigramam - Davidraj
- Inuvil - Miss P Pearlranji
- Jaffna - Miss S Nininthini
- Jeyapuram - Rev Paul Suresh
- Karainagar - Mr K Kularanjan
- Kalmadukulam-Rev Jerome Paul
- Karadiyan Aru - Mr S Vijayarajah
- Konavil - Rev A Pathmathayalan
- Manipay - Mr F Richard
- Mallavi - Mr S Ratnavel
- Moolai - Mr K Uthayan
- Navaly - Miss S Uthayarekkah
- Nuwara Eliya - Rev A Savarimuththu
- Nunavil - Mr S Ranjanbabu
- Pandatheruppu Mr S Sritharan
- Rarl Odai - Rev Antony Sebastion
- Salambaikulam - Rev T Jeyachandran
- Sadilipay - Mr S Selvantha
- Sathiapuram - Mr S Lingeswaran
- Tellipalai - Mr J Thayaparan
- Thevakiramam - Mr S Lingeswaran
- Tholpuram - Mr K Uthayan
- Udupiddy - Mr Paul Sathees
- Uduvil - Miss S Senthamilchelvi
- Uranee - Mr Arumuganayagam
- Usan - Mr Vincent Jeyakumar
- Vaddukoddai - Miss B Savitha
- Varany - Mr K Thurairatnam
- Vavuniya - Rev K A Joseph
- Viswamadu - Rev D S Mathiyaparanam
- Watta - Mr A Gunaseelan



# கண்ண தாசனும் தத்துவமும்

ஜெ கி. ஜெயசிலன்

17- 10- 1999 இல் கவியரசர் கண்ணதாசன் 18வது நினைவு நாளாகும்

"கல்தரையிற் கைபோட்டு நீந்துகின்ற மனிதா! காலமிட்ட கட்டளையை மாற்றுவது எளிதா?"

இப்படித் தத்துவக் கேள்வி கேட்ட கண்ண தாசனுக்குத் தத்துவவியாக் யானஞ் செய்வதிலே மிகுந்த விருப்பு இருந்திருக்கின்றது. காரணம், வாழ்க்கை அநுபவங்களின் அறுவடையே. காயப்பட்ட உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த கவிதைகள் தத்துவங்களாக உருவம் பெற்றன. அவ்வண்ணம் உருவம் பெற்றவை, மற்றவர்க்கு உணர்வூட்டியவாறு உள்ளன. அதன் விளைவாகத் தான்,

"நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தான சொல்லுங்கள்! உங்கள் ஆசை நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்"

-என்று கண்ணதாசன் கேட்கும் போது நமக்கு உறுத்தலும் வலியும் உண்டாகின்றன. அப்படி உண்டாகினால்தான், உண்மையில் நாம் மனிதர்; அதை உண்டாக்குபவைதான் உண்மையான தத்துவக் கவிதைகள்! கண்ணதாசன் கவிதைகளுக்கு அது இயல்பாகவே அமைந்து விட்ட குணாம்சம், அந்தத் தத்துவத்தனித்துவம்;

"யாரை எங்கே வைப்பது என்று
தெரியலே யாருக்கும்! அட!
அண்டங் காக்கைக்கும் குயில்
களுக்கும் பேதம் புரியலே!"

எனக் குமுறும் போதும்,

"நன்றி கெட்ட மாந்தரடா!
நானறிந்த பாடமடா!
பிள்ளையாய் இருந்து விட்டால்,
இல்லையொரு தொல்லையடா!

என்று கலங்கும் போதும் 'கதை கட்ட ஒருவர் பிறந்து விட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம் உண்டு! காப்பாற்றச் சிலபேர் இருந்து விட்டால் கள்வர்கள் வாழ்விலும் நியாயம் உண்டு!"

என் தாகச் சாடும் போதும் பொங்கித் ததும்பும்! சொந்த அநுபவசோகம், கவிதைப் பண்புள்ள இசைப்பாடல்களாக உருவெடுக்கு மனதைப் பிசைந்து உருக்குகின்றன. சொல் எளிமை வாக்கிய வலிமை, கருத்தினிமை இந்த மூன்றையும் ஒன்று சேர்த்துக் கலக்கி விட்டுக், கவிழ்த்துக் கொட்டினால் கிடைப்பவையே கண்ணதாசன் கவிதைகள்! அந்தப்பாணியும் உத்தியும் தான் படித்தவர் முதல் பாமரர்வரை கண்ணதாசன் தத்துவத்தையும் மிக இலகுவான மொழிநடையிற் சொல்லி விடுவதை,

"யூஜ்ஜியத்திற்குள் ஒரு ராஜ்
ஜியத்தை ஆண்டு கொண்டு புரி
யாமலே இருப்பான் ஒருவன்!
-அவனைப் புரிந்து கொண்டால்
அவன் பேர் இறைவன்!"

என்கிற பாடலிலும்,

போனால் போகட்டும் போடா!
-இந்த
பூமியில் நிலையாய் வாழ்ந்தவர்
யாரடா?
வந்தது தெரியும்; போவது
எங்கே?

வாசல் நமக்கே தெரியாது!
வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால்
இந்த மண்ணில் நமக்கே இடம்
எது?"

எனும் மரணம் பற்றிய பாடலிலும் தெளிவாகக் காணலாம் அந்த வகையில் கண்ணதாசனும் தத்துவமும் கவிதையும் ஒன்றிப் பிறந்த இரட்டைப் பிறவிகள் அத்தகைய படைப்பாளியும் அவனது படைப்பும் காலத்தைவென்று வாழப் போவது உறுதி.

# பிள்ளைகள் விழா

## 99 வன்னிப் பிராந்தியம்

வன்னிப் பிராந்திய திருச்சபைகளை உள்ளடக்கியதான பிள்ளைகள் விழாவானது ஜெயபுரம் திருச்சபையில் 7 - 8 - 99 அன்று இடம் பெற்றது அனைத்து சபைகளும் வருகையுடன் சாசிப் பவனி ஆரம்ப ஆராம்பமாகியது. அதனை அடுத்து ஆரம்ப வழிபாடு இடம் பெற்றது. இதனை ஜெயபுரம் ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகள் நடாத்தினர். இறை செய்தியை அருட்தந்தை மா சே. கருணாரட்ணம் அடிகள் வழங்கினார்.

ஐக்கிய காலைத் தேனீரை அடுத்து வேதாகமம் புதிர்ப்போட்டியும் இடம் பெற்றது. குழுப் பாடல் போட்டியில் பின்வரும் சபைகள் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

1ம் இடம் முறிகண்டி திருச்சபை
2ம் இடம் ஜெயபுரம் திருச்சபை
3 இடம் கோட்டைகட்டியகுளம் திருச்சபை

16 வயதின் கீழ்ப்பிரிவில்:
1ம் இடம் சலோம் நகர் திருச்சபை
2ம் இடம் முறிகண்டி திருச்சபை

13 வயதின் கீழ்ப் பிரிவில்:
1ம் இடம் சமாதான பாபி திருச்சபை
2ம் இடம் வன்னேரிக்குளம் திருச்சபை

ஐக்கிய மதியபோசனத்தை அடுத்து நாடகப் போட்டி ஆரம்பமானது இப் போட்டியிலே,

1ம் இடம் சாலோம் நகர் திருச்சபை
2ம் இடம் கோட்டைகட்டியகுளம் திருச்சபை
3ம் இடம் கோணாவில் திருச்சபை

நாடகப்போட்டியினை அடுத்து புதிர்ப்போட்டி கட்டுரைப்போட்டி சித்திரப் போட்டி மனனவசனப் போட்டி ஆகியவைகளில் வெற்றி ஈட்டிய பிள்ளைகளுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இப் பிள்ளைகள் விழாவின் மகுடவாக்கியம். "பரிசுத்த ஆவியானவரே வாரும் படைப்புக்கள் அனைத்தையும் புதுப்பியும்" என்பதாகும்.

வன்னிப் பிராந்திய திட்டப் பணிப்பாளர் திரு. எஸ் இரட்ணவேல் அவர்கள் இவ் விழா சிரான முறையில் இடம்பெற பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டு மதிய போசனம் வழங்குவதற்கு முன்னின்று செயற்பட்டு ஒத்துழைப்பு நல்கினார். அவருக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகும். இவ் விழாவில் இம் முறை 1000 பேருக்கு மேற்பட்டோர். கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பரிசளிப்பு விழா

உடுவில் மகளீர் கல்லூரி பரிசளிப்பு விழா செப்டம்பர் மாதம் 15ம் திகதி நடைபெற்றது யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பொ பாலசுந் தரம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## பருத்தித்துறை பிரதேச மலர்

செப்டம்பர் மாதம் 15ம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச மலர் வட இந்து மகளிர் கல்லூரியில் வெளியிடப்பட்டது. பருத்தித் துறை சம்பந்தமான கல்வி பொருளியற் குறிப்புக்களும் அறிஞர்களின் வாழ்த்துச் செய்திகளும் இதில் இடம் பெற்றுள்ளன இவ் விழாவில் யாம். அரசாங்க அதிபர் திரு க சண்முகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## திருவும் அருள்திருவும்



அருள்திரு: தேவாலயத்தில் மணிக்கூடு இருந்த இடத்தில் ஏன இப்பொழுது கலண்டரை மாட்டியிருக்கிறீர்கள்?

திரு: உங்களுடைய பிரசங்கத்திற்கு மணிக்கூடு போதாதாம். கலண்டர் போட வேண்டும் என்றார்கள்.

மணிமாறன்

## திருமணம்

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த திரு: திருமதி செல்வராஜாவின் மகள் ஆன் ஷாந்தினியை பட்டக்குளியைச் சேர்ந்த காலஞ் சென்ற ஆர் ஜே தவராஜ சூரியர் திருமதி தவராஜ சூரியா ஆகியோரின் மகன் டிலிப்குமார் செப்டம்பர் மாதம் நாலாம் திகதி திருமணம் செய்து கொண்டார். வெள்ளவத்தை C. S I ஆலயத்தில் நடைபெற்ற இந்த விவாக ஆராதனையை வண பி தவேந்திர அநுகூலன் வண ரி அசோக்குமார் ஆகியோரின் துணையுடன் நடாத்தினர். திருமண ஆராதனையைத்தொடர்ந்து ஐக்கிய விருந்து கொள்ளுப்பிட்டி சீவியூ ஹோட்டலில் நடைபெற்றது.

## உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு புதிய சீருடைகள்

உடுவில் மகளீர் கல்லூரியின் 175ம் ஆண்டு விழாவை முன்னிட்டு கல்லூரி மாணவிகளுக்கு புதிய சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த உடையானது மேல் சட்டை வெள்ளை நிறமாகவும் இத்துடன் முழுச் சட்டை சுடும் நீல நிறமாகவும் இருக்கின்றது. இத்துடன் கழுத்துப்பட்டியையும் அணிந்து கொள்வர்.

## குறைகூற...

☆ பரகசியமாக ஒருவருடைய குறைகளை சுட்டிக் காட்டாமல் இருவருடைய உறவுகளாகவே வைத்துக் கொள்வோம்.

☆ குறைகளை சுட்டிக் காட்டிய பின். அதற்காக மன்னியுங்கள் மன்னிப்புங்கள் என்று கூறுகின்றபோது குறைவானவருக்கு தாழ்வு சிக்கல் உருவாகும்.

☆ ஒருவருடைய குறைவுகளை சுட்டிக்காட்டும் போது மற்றவரின் அளவிடைகளை பயன்படுத்த வேண்டாம்.

☆ ஒரு முறையில் குறைகளை விளக்கவும். சுற்றிவளைத்து குறைகளை அவிழ்க்க வேண்டாம்.

☆ இறுதியாக குறைகளை சுட்டிக் காட்டும் போது சாதாரண நண்பன், சகோதரன், பெற்றோர், என்ற உறவில் சுட்டிக் காட்டவும் முகத்தில் கோபத்தையோ வெறுப்பையே வெளிக்காட்ட வேண்டாம். குறைகளை சுட்டிக் காட்டுங்கள். ஆனால் அதற்கு ஒரு வழிமுறையை கையாளுங்கள்

## தாவீது கோலியாத்து நாட்டிய நாடகம்

நவாலியூர் நா செல்லத்துரை தயாரித்து நெறிப்படுத்திய தாவீது கோலியாத்து என்ற நாட்டிய நாடகம் சென்ற சனிக்கிழமை 25 - 9 - 99 அத்தியட்சாதீன விழாவின் போது அரங்கேற்றப்பட்டது. வட்டுக்கோட்டை லீவைஸ் போல்டிங் இல்ல மாணவர்களே இந்த நாடகத்தின் நடிகர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## தாரகை ஒளி

நாயும் கிழாய் செந்தமி
நாட்டார் நலிவதை நா
கண்டும், ஒயுதல் இன்
அவர் நலம் எண்ணி உழைத்
திட நான் தவறேன்.

பாரதிதாசன்

## சாமுவேல் பிஸ்க் கிறீன்

சென்ற வருடம் நவம்பர் மாதம் 11 ம் திகதி திரு. ஆர். அம்பிகைபாகனின் களராத முயற்சியினால் சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்களின் முத்திரை இலங்கைத்தபாற் சுந்தி திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

சாமுவேல் பிஸ்க் அவர்களுக்கு கிறிஸ்தவர் அல்லாத ஒருவரே அரும் பிரையாசப்பட்டு முத்திரை வெளியிடப் பண்ணினார். இது அமெரிக்க மிஷனரிமாரின் தன்னலமற்ற சேவைக்கும் யாழ்ப்பாண மக்களின் நன்றி யுணர்வுக்கும் எடுத்துக் காட்டு.

டாக்டர் கிறீன் அவர்கள் 1822 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் திகதி மசாச்சுசெற்ஸ் மாநிலத்திலுள்ள கிறீன் ஹில் என்ற விடத்திலே] பிறந்தவர். நியூ யோர்க்!பல்கலைக் கழகத்தில் கற்று அரங்கேறிய வைத்தியர். ஆனால் தமது வாழ்வினை யாழ்ப்பாண மக்களுக்கு சேவை செய்வதற்கு அர்ப்பணித்தார். தமது இருபத்தா றாவது வயதில் யாழ்ப்பாணம் வந்தார். தமது ஐம்பத்திரண்டாவது வயதில் அமெரிக்கா திரும்பினார். 62 வயதில் இவ்வுலக வாழ்வினை நீத்தார்.

டாக்டர் கிறீனைப்]போல பல மிஷனரி வைத்தியர்கள் சென்ற நூற்றாண்டில் ஆசியாவிலே பணியாற்றியிருக்கின்றனர்.

டாக்டர் கிறீனின் பெருமை அவருடைய முற்போக்குச் சிந்தனையே யாகும். அவர் கூறிய கருத்துக்களையும் செய்த செயல்களையும் பார்க்கும் போது அவரைக் ''காலமறிந்து கூவிய சேவல்'' என்று குறிப்பிடுவது சாலப் பொருத்த மானதாகும்.

தமிழ் மாணவர்களுக்குத் தமிழிலேயே மருத்துவம் கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையில் அவர் உறுதியாய் இருந்தார். இதனாலே தான் 1864ம் ஆண்டு தமிழ் மொழி மூலம் மாணவர்களுக்கு மருத்துவம் கற்பிக்கலானார்.

ஆங்கிலத்திலிருந்த தலை சிறந்த மருத்துவ நூல்களை தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டார். தமிழால் விஞ்ஞானம் மட்டுமன்றி மருத்துவத்தையும் கற்பிக்கலாம் என்று நிரூபித்துக்காட்டினார். விக்டோரியா மகாராணியாரின் காலத்தில் பெருந்தொகையான மக்கள் ஆங்கில அபிமானிகளாகத் திகழ்ந்தனர். அக்கால கட்டத்தில் பணிபுரிந்த கிறீன் ஐயர் தமிழ் மக்களுக்குத் தமிழின் பெருமையை உணர்த்த வேண்டியவராகவிருந்தார். மக்கள் ஆங்கிலேய நாகரிகத்தைப் பின்பற்றுவதனைக்கண்டு சின

மடைந்தார். அவர் எழுதிய பின்வரும் கடிதம் அவரின் உள்ளக்குமுறலைத் தெளிவாகக் காட்டுகின்றது.

''இங்கு வேட்டியிலிருந்து காற்சட்டைக்கும். சால்வையிலிருந்து மேற்சட்டைக்கும் தாவர உணவிலிருந்து புலால் உணவிற்கும். குடிசையிலிருந்து மாளிகைக்கும் மக்கள் விதேசிகளாகும் வரை மாற்ற மேற்பட்டு கொண்டேயிருக்கு மென்று எண்ணுகின்றேன். இந்துக்கள் ஐரோப்பிய மயமாவதைவிடக் கிறிஸ்துவ இந்துக்களைக் காணவே ஆசைப்படுகின்றேன்''

இப்புனிதனின் நன்னாளில் நாட்டுக் குழைக்க நலிந்தவர்களுக்காகப் பாடுபட நம்மை அர்ப்பணிப்போமாக.

# எஸ். ஜே. எழுதுவது

## யாழ்ப்பாணத்துக்கு ஒரு வழி

திருகோணமலையிலும் வவுனியாவிலும், ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணம் செல்ல தவம் இருக்கின்றனர். 19 ம் நூற்றாண்டிலும் ஒரு கிறிஸ்தவ புலவர் யாழ்ப்பாணத்துக்கு செல்வதற்காக இந்தியாவில் உள்ள நாக பட்டிணத்தில் தவம் இருந்தார். அவரின் பெயர் வேதநாயகம் சாஸ்திரியார். இவர் 1811 ம் ஆண்டு தம்முடைய பாடகர் குழுவுடன் தஞ்சாவூரில் இருந்து நாக பட்டிணத்துக்கு வந்து சேர்ந்தார். அக்காலத்தில் நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பாய் கப்பல் மூலமாக பிரயாணிகள் வந்து போவார்கள். வடகீழ்பருவ பெயர்ச்சி காற்று அடிக்கின்ற போது இந்த பாய்க்கப்பல் காங்கேசன் துறையை நோக்கி புறப்படும்.

காற்று அடிக்க தாமதம் ஆகியது புலவர் தஞ்சாவூரில் இருந்து கொண்டு வந்து பணமும் செலவாகிவிட்டது. தமக்கும் தமது பாடகர் குழுவிற்கும் எவ்வாறு உணவு பெறுவது என்று அங்கலாய்த்தார். நாகபட்டிணத்தில் யாரும் தெரிந்தவர்கள் இல்லை. அப்போது வேதநாயகம் சாஸ்திரியார் இறைவனைப்பற்றி ஒரு பாட்டை இயற்றி தமது பாடகர்களுடன் வடக்கு திசையை நோக்கி பாடினார். அப்பாடல் பின்வருமாறு (கலித்துறை)

''கடகாத் திரத்துயரால்
மெலிந்தே தமியேனுமவ
கடகாத் திரைக்கடல்
யாழ்ப்பாணமேறிக் கடக்கவென்
றால்
நடகாத் தூற் பான்மையி
ஞாலோர் 'கிழமை நலிந்து
நின்றோம்
வடகாத் தருள் திரியேகா
என்பங்கில் வார்ந்தவனே

இப்படி அவர்கள் பாடியவுடன் வடகீழ் காற்று அடிக்கத் தொடங்கியது கப்பற் காரர் இவரையும் பாடகர்களையும் துரிதப் படுத்தி கப்பலில் ஏற்றி காங்கேசன் துறையில் கொண்டு வந்து சேர்ந்தார். வேதநாயகம் சாஸ்திரியாரை அழைத்தவர் சுண்டுக்குழியில் இருந்த கிறிஸ்தியன் டேவிட் என்ற போதகராகும். இவரும் இந்தியாவை சேர்ந்தவர். ஆனால் நெடு காலத்திற்கு முன்னர் சுண்டிக்குளியில் பணியாற்ற வந்து



வேதநாயகம் சாஸ்திரியார்

விட்டார். பாய்க் கப்பலில் இருந்து இறங்கிய போது வேதநாயக சாஸ்திரியாரிடம் ஒரு பணம் மாத்திரம் இருந்தது. கடவுளை நோக்கி வேண்டுதல் செய்துவிட்டு குதிரை வண்டியிலே பாடகர் குழுவுடன் ஏறினார். கிறிஸ்தியன் டேவிட் போதகர் அவர்களை கண்டவுடன். தாமே எல்லாருக்கும் கூலி கொடுத்து குதிரை வண்டிக்காரரையும் மற்றவர்களையும் அனுப்பி விட்டார். வேதநாயக சாஸ்திரியார் சிறிது காலம் கிறிஸ்டியன் டேவிட் போதருடன் தங்கியிருந்து விட்டு பின்னர் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து சில மாதங்கள் அங்கே தங்கியிருந்து கதாபிரசங்கங்களை நடத்தி விட்டு இந்தியாவிற்கு திரும்பினார்.

சுண்டுக்குளியில் அவர் தங்கியிருந்த போது தான் அவருடைய உடைகள் வண்ணான் வீட்டில் இருந்து காணாமல் போயின. அந்த நஷ்டத்தை கேள்விப்பட்ட போது தான் தேவநாயக சாஸ்திரியார் பின்வரும் பாடல் இயற்றினார்.

''நெஞ்சே நீ கலங்காதே
சீயோன் மலையின் இரட்சகனை
மறவாதே''

## புதிய சமாதான நீதிவான்

அளவெட்டி திருச்சபையைச் சேர்ந்த ஐ. மார்க்கண்டன் அவர்களுக்கு சமதான நீதிவான் பதவி (J .P)கிடைத்துள்ளது 21 - 9 - 99 செவ்வாய்க் கிழமை காலை 9 30 மணிக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்தார். திரு. ஐ. மார்க்கண்டனுக்கு உதயதாரகையின் பாராட்டுதல்கள்.

## ஆன்மீக நிறைவு விழா

கோணாவில் திருச்சபையின் 12 ம் ஆண்டு நிறைவு விழாவும் ஆன்மீகக் கருத்தரங்கும் முறையே 13 14 5 ஆம் திகதிகளில் ஆலயத்தில் நடைபெற்றது.

13 ம் திகதி ஆராதனையை தொடர்ந்து ''ஆன்மீக வாழ்வுக்கு இறை வேண்டல் அவசியம்' என்னும் சிந்தனையில் விசுவமடு ஊழியன் அருட்திரு M. D. போல் சுரேஷ் வேதப்படிப்பு நடத்தினார். அதனைத் தொடர்ந்து சபையார் யாவருக்கும் ஐக்கிய இரவுப் போசனம் வழங்கப்பட்டது. அன்றைய நாளில் ''கல்லறையில் மலர்ந்த காவியம்'' என்ற படமும் காண்பிக்கப்பட்டது.

## குறை கூறாதீர்

மனித வாழ்வில் குறைகளும் நிறைகளும் ஒன்றோடொன்று கலந்தே காணப்படுகின்றன குறையில்லாதவன மனிதன் அல்ல. ஆனால் ஒரு சிலர் தம்மிடம் உள்ள குறைகளால் தம்மைத்தாம் தாழ்த்தி வாழ்வின் இறுதி நிலைக்கு தள்ளப்பட்டு தற்கொலை முயற்சிக்கே வந்து விடுகின்றனர். மாறாக இன்னும் சிலர் தமமிடம் உள்ள நிறைவுகளால் வாழ்வில் மாபெரும் ஒளிக்கதிர்களாக ஒளிவீசுகின்றனர். அப்படி என்றால் இதை விதி என்பதா?

அப்படி அல்ல குறைவுகளும் நிறைவுகளும் இரண்டறக் கலக்க வேண்டும். ''முதலாளியும் தொழிலாளியும் முரண்பட்டு கொள்வதாலே தான் சமநிலை உருவாகும் என்கிறார் காள் மார்க்ஸ்.

ஒரு சமூக செயற்பாட்டிற்கு Id, Ego, Supper ego இவை மூன்று நிலைகளும் தேவை. 1 கொரி 12: 18 முதல் உள்ள வாக்கியங்களிலும் உயர்வும் தாழ்வும் இரண்டும் ஒன்றிப்பு அடைய வேண்டும். அப்பொழுது தான் சீரான செயற்பாடு இருக்கும் என உடல் உறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு புனித பவுலடியார் எடுத்து இயம்புகின்றார்.

ஆகவே இயல்புடையவை இயலாதவற்றை குறை கூறி மேலும் தாழ்த்தி விடுவதால் வெற்றி கிடைக்காது. மாறாக ஒரு சமூகத்தின் ஒரு பகுதி அழிந்தே போய்விடும்.

ஆகவே குறை உள்ள ஒரு மனிதனை அக் குறையில் இருந்து விடுபட வழிசமைக்க வேண்டும்.

எஸ். ஸ்டீபன்

அதுவே கிறிஸ்துவின் பணியாக இருந்தது. பாவங்களை வெறுத்த ஆண்டவர் பாவிகளை நல்வழிப் படுத்த பல படுகள் பட்டார் இதற்கு எமது வேதாகமம் சாட்சி அளிக்கின்றது. குறை கூறுவதும் குத்திப் பேசுவதும் ஒரு மனிதனை தாழ்வு மனப்பான்மைக்கு இட்டுச் செல்லும், சமூக இடைவெளிகளில் சிக்கல்கள் மிக அவசியமானதாகும். ஆனால் அந்த சிக்கலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு குறை கூறுதல் அல்லது குத்திப் பேசுதல் ஒரு நல்ல சமூதாயத்திற்கு வரைவிலக்கணமாகாது.

ஆகவே குறைகளை சுட்டி காட்டுவது நிறைவுகளை கண்டடையும் வழிமுறைகளாகக் கொண்டு எப்படி குறை கூறுவது என்று ஆலோசிப்போம்.

- ☆ இயலுமான வரை குறை கூறுவதற்கு முன் உறவுகளை நெருக்கமாக்கிக் கொள்வோம்.
- ☆ பழைய குறைகளை திரும்ப ஞாபகப் படுத்தாமல் அப்பொழுது நடந்த குறைகளை மட்டும் சுட்டிக் காட்டலாம்.
- ☆ குறையை சுட்டிக் காட்டிய பின் அத்தோடு விட்டுவிடுவோம்.
- ☆ குறைகளை எவருக்கு சுட்டிக் காட்டுகின்றோமோ அவர் செய்யும் நிறைவுகளுக்கு தட்டிக் கொடுப்போம்.
- ☆ குறைகளை நேரடியாக சுட்டிக் காட்டுவோம். புறம் பேசுதல் உறவைக் கெடுக்கும்.
- ☆ குறைகளுக்கு மூன்றாம் நபரை பயன்படுத்த வேண்டாம்.

(2 ம் பக்கம் பார்க்க)

# KINDER NOT HILFE SUNDAY

K N H has become a household word in Sri Lanka. It is because of the numerous Childrens' Homes, Day Care Centres and Vocational Training Centres which are doing yeo-men service to the destitutes in our country with K N H support.

Mr. Karl Bormann a kind-hearted German seeing the suffering of miliions of children in the third world felt that he will be failing in his duty as Christian if the remains inditferent to their cry.

The stories narrated by German Bishops who served in South India about the plight of the little children touched the hearts of people in affluent societies. The death of children in the third world due to war, social injustice and casteism were hundreds of thousand.

In 1959 he set up an organigation in Germany to create funds for the running of homes for helpess children in poor countries.

In 1961 this body was recogonised as a Charity organigation with the name KINDER NOT HILFE, which in German means "CHILDREN NEED HELP", Thanks to the band of committed Staff at Duisburg Kinder not Hilfe has become an organisation reputed for efficiency and transparencey, drawing support from many parts of Central Europe. At present Kinder Not Hilfe is supporting 112,000 children in South Africa, Ethopia, Chile, Brazil, Phillipines and South Asia.

Kinder Not Hilfe, in these war torn and proverty sticken areas work with local churches and Church orginagations. In Sri Lanka they work through the S L C C C A in which our Diocese is a member.

We are happy that Sunday the 26th September 1999 has been marked as K N H Sunday. This is the day set apart to thank God for Kinder Not Hilfe and the love and affection of foster parents.

Our Diocese has assigned persons to lead worship and preach in the local churches on K N H Sunday. It is a matter of great satisfaction and joy that most of these preachers are young men and women who grew up in K N H Homes.

They will tell the congregations about the concern of Mr Karl Baumann and the work done by the dedicated staff in Germany and Colombo. The congregations will thank God for the foster parents for the leardership given by Hoeschelmann, Mr Detlef Hiller the Officer in charge of Asia Desk.

However the spirit of sharing shall be the main theme of K N H Sunday. The Kinder Not Hilfe by example had taught us to share our resources with the down trodden, lowly and the lost. We sincerely hope that the hundreds of young men and women in K N H Homes will have genuine concern for the poor in the nieghbourhood and take the K N H spirit into the remote villages of Sri Lanka.

## FISKE GEERN



Dr. Samuel Fiske Green
1822 - 1884

Medical Evangelist to the Tamils.

October 10th' is his Birth Anniversary.

Dr Samuel Fiske Green who served at Manipay, from 1848 to 1874, was founder of Green Memorial Hospital Manipay. We give below the important events that took place in his life:

- 1847 Arrival in Jaffna
- 1848 Shifted his Medical students and Dispensary to Manipay.
- 1850 His first batch of Medical students passed out At his Medical School at Manipay, started the work of translating the books on Medical science into Tamil
  Founding of "Friend in Need Hospital" in Jaffna (Civil Hospital ) Dr Green co - founder and Medical Superintendent.
- 1857 Went on furlough.
  Married Margret Phelps. Had three daughters and one son Julia, Louse, Mary and Nathan
- 1864 Started teaching medicine in Tamil
- 1874 Went home
- 1884 Died 28th May 1884

## CATS II

Second Conference of Asian Theologians (C A T S II) was held at Ecumenical Christian Centre, Bangalore from August 9th - 15th 1999. About 100 theologians from most of the Asian countries, Australia and Asian theologians living in North America participated. The theme for the Confernce was "Celebrating life in Asia'e

# Remembering Rev. George Daniel THOMAS



The Rev G. D. Thomas was born in 1878 a Kalvayal in Chavakachcheri. He was baptized by Rev. T. P. Hunt into the Christian faith.

In 1906 he married Alice Arianayagam Velupillai of Chavakachcheri.

In 1908 Rev. G. D. Thomas joined the Staff Jaffna College, but decided to offer himself to Lords work and went to United Theological College, Bangalore where he studied from 1914 - 1917. His first station was Moolai. In 1918 he was ordined Minster of the S I U C Subsequently he served at Navaly, Vaddukoddai, Tellippalai, Uduvil, Udupiddy, Pandateruppu and Araly.

The following are the positions held by Rev. G. D. Thomas; President, Vice President, Secretary of the Jaffna Council of S I U C.
General Manager - American Mission Schools.
Tamil Editor- Morning Star
Member Larsen Committee
— Bible Translation
Member Church Union Committee of the SIUC

When he retired in 1954, the Executive Committee placed on record "his sincerity of religious conviction his scholarship in two languages and his eloquence which commended him to all congrigations.

He died in 1955 at the age of 79

## In Memoriam



### Rt. Rev. Dr. D. J. AMBALAVANAR

Born 28. 02. 1928

Entered Glory 10. 10. 1997

Two years have passed
But memories stay,
As near and dear as yesterday

In a garden of rest no worries no pain
Safe in the arms of Jesus
Till we meet again.

Diocesan Office
Vaddukoddai

## OBITUARY

We are sorry to record the death of Mr. A. C. J. Eliezer, which took place on Saturday the 11th September 1999 in Victoria, Australia. The funeral took place on Sunday the 12th of September.

He was the brother of Prof C. J. Eliezer and hasband of Kirupai Vallipuram. He leaves behind besides his wife, Dr. Kumar Eliezer, Mr Inpam Eliezer (Sons), and Mrs Sirmevan, Mrs Thomas and Mrs Jeganathan. (daughters)

The death occurred of Kunasingam Welch T., beloved husband of Swarana, loving father of Noel and Surika brother of Mr Welch Balasingam, Thangasothy and late Kamala, son of late Mr S.H.T Welch of Araly North. nephew of Rev R. C P Welch. The funeral service took place at 93 Manning Place, Wellawette on Mouday the 6th of September 1999. Burial took place at General gemetery, Kanette. A service of remembranec was held at the residence of the sister of ths deceased Mrs Thangasothy Santharasigam, Araly North, Vaddukoddai

Trubutes were paid by Bro T. S Joshua and Rev A. A. Paul at the Service

## Drieberg..

Alumni living abroad about the 125th Anniversary and publish a Souvenir.. The celebration will take place in the year 2000. Drieberg College was founded by the American Missionaries in 1875. HUNT, DRIEBERG ABRAHAM and Sinnathamby are the names of the Houses of Drieberg College. Mr J. S. Drieberg was a British Officer. Others were natives of Chavakachcheri

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka- News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. Diocesan Complex Vaddukoddai on Friday the of 10th October 1999 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.